# இயக்கச்சியிலிருந்து ராணுவ பவனி தொடர்கிறது

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 5 றம்ழான் 9 இதழ் 97

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19 5-1986

## சண்டையில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிவந்து கொண்டிருந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரின் நடைபவனி இயக்கச்சியில் போராளிகளிசி நடவடிக்கைகளால் தடைப்பட்டிருந்த போதிலும், இராணுவத்தினர் தமது பயணத்தை தொடர்வதாக தகவல் தெரிவிக்கிறது.

இயக்கச்சியில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சில போராளிகள் இறந்துள்ளனர் என்றும் மூவர் காயமடைந்துளளனர் என்றும் தெரியவருகிறது.

காயமடைந்த கிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மோதலில் இராணுவதரப்பில் ஐவர் இறந்துள்ளனர் என்று நம்பப்படுகிறது.

இயக்கச்சியை விட்டு யாழ்ப்பாணம் நோக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வந்துகொண்டிருப்பது தெரிந்ததே.

தென்னந்தோட்டங்கள், குடியிருப்புக்காணிகளுக்கூடாக இராணுவத்தினர் நடைபவனியாக வந்துகொண்டிருக்கிறார்களாம்.

ஹெலிகொப்டர் பொம்பர் விமானங்களின் பாதுகாப்புடன் இராணுவத்தினர் முன்னே நடந்துவர சற்றுத் தூரத்தில் இராணுவத்தின் கவச வண்டிகள் ட்ரக் வண்டிகள் வந்துகொண்டிருக்கின்றனவாம். [ஐ]

## ● இலங்கை இனப்பிரச்னை: ராஜீவ்இன்றுமுக்கிய முடிவு எடுப்பார்?

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்னை விஷயத்தில் முக்கியமான முடிவை இன்று நாடு திரும்பும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எடுப்பார் என நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஆபிரிக்க நாடுகளுக்கு 5 நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த 14-ம் திகதி சென்றது தெரிந்ததே. அவர் இன்று நாடு திரும்புகிறார்.

திரு. காந்தி பெரும்பாலும் இன்று அல்லது நாளை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசுவார் என நம்பப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

# யாழ். வந்த 3500 பயணிகள்

# கிளிநொச்சியில் தஞ்சம்

## ஆனையிறவு ஊடாக போக்குவரத்து தடை

(நமது வவனியா நிருபர்)

**வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வாகனங்கள் ஆனையிறவுத் தடைமுகாமினூடாகப் பிரயாணம் செய்ய நேற்று அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாக யாழ் நோக்கி வந்த சுமார் 3,500 பிரயாணிகள் கிளிநொச்சியிலும் பரந்தனிலும் தங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணம் நோக்கி வந்த வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரனும ஆனையிறவில் வைத்துத்திருப்பி அனுப்பப்பட்டார்.**

கடந்த சனிக்கிழமை முதல் வெளி மாவட்டங்களிலிருநது யாழ் குடாநாட்டிற்கான போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. இதனால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்

இதனல் கொழும்பு மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் யாழ்ப்பாணம் நோக்கி வந்த சுமார் 3 500 பிரயாணிகளும், 1 பஸ்களும், 50க்கு மேற்பட்ட லொறிகளும் கிளிநொச்சி, பரந்தன், வவனியா ஆகிய இடங்களில் பாடசாலைகளிலும், அரச விடுதிகளிலும் தங்கியுள்ளனர்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த வவனியா அரச அதிபர் திரு கே. ஸி லோகேஸ்வரன் அன்றிரவு கிளிநொச்சியில் தங்கிவிட்டு நேற்றுக்காலை யாழ் நோக்கிப் புறப்பட்டார். ஆயினும் ஆனையிறவு தடைமுகாமுக்கு சுமார் 200 யார்

[5-ம் பக்கம் பார்க்க]

## நகரில் நேற்று...

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் நேற்று ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கு மிடையில் நடந்த நேரடி மோதலினல் நகர் வெறி

[5ம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் இத்தாலிய யுத்தக் கப்பல்கள்

[கொழும்பு]

இத்தாலிக் கடற்படையைச் சேர்ந்த இரு யுத்தக்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன

ஏவுகணைகள், பீரங்கிகள் ஆகியவற்றைக் இக்கப்பல்கள் கொண்டுள்ளன மொத்தம்460 கடற்படை வீரர்கள் இக்கப்பல்களில் கடமையாற்றுகின்றனர்.

இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் பல குண்டுவீச்சு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ஆறு யுத்தவிமானங்களை இத்தாலியிடமிருந்தே இலங்கை அரசு கொள்வனவு செய்தது குறிப்பிடத்தக்க . இவற்றில் ஒனறு அண்மையில் பேருவலக் கடலில் விழுந்து சேதத்துக்குள்ளாகியது தெரிந்ததே. [செ]

## வல்வை நேரடி மோதலில் 3 ராணுவம் பலி

[வல்வெட்டித்துறை)

நேற்றுமாலை வல்வை இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்ற சுமார் 30 இராணுவத்தினர்மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவ சிப்பாய் பலியானதுடன் மூவர் படுகாயம் அடைந்திருக்கலாமென நம்பப்படுகிறது. ஒரு மணித்தியாலம் இததாக்குதல் நடைபெற்ற பின்னர் இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர்.

இச்சம்பவத்தின் போது சுமார் 15 நிமிடங்கள் ஹெலிகொப்டாலிருந்தும் துவககுச்சூடு மேற்கொள்ளப்பட்டது.

உயரக் கடலில் நிலை கொண்டுள்ள கடற்படைக் கப்பல்களிலிருந்தும் வேட்டுக்கள் கரை நோக்கித் தீர்க்கப்பட்டன

இச் சம்பவத்தின் பின்னர்

[5ம் பக்கம் பார்க்க]

## சோதனை

[திருமலை]

திருகோணமலை நகரப்பகுதியில் சில இடங்களில் நேற்றுக் காலை ஆயுதப்படையினர் சோதனை நடத்தினர்கள்

இச்சோதனையின்போதுசிலர் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப்பட்டசிலர் பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர்.

# 'திரிசங்குநிலை'யில் பண்ணையில் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை நான்கு வாகனங்களில் தீவுப்பகுதி நோக்கிப் புறப்பட்ட ஆயுதப்படையினரைப் போராளிகள் பண்ணைப்பாலத்தின் இருபக்கத்திலும் நின்றுநேற்று முழு நாளும் தடுத்துவைத்தனர்.**

பண்ணை சங்கிலிப்பாலத்தில் நேற்றுக் காலை 6 மணி முதல் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கோட்டைக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் ஆயுதப்படையினர் நான்கு வாகனங்களுடன் தரித்துநின்றனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் ஒருட்ரக், ஒருவான், இருகவசவாகனங்களில் ஆயுதப்படையினர் கோட்டையின் பிற்பகுதியால் புற[illegible] போது பண்ணைப் [illegible]தியில் ஒருவெடிச்சத்தம் கேட்டதாவும் ஆனாலும் வாகனங்கள் பண்ணைப்பாலத்தினுல் தீவுப் பகுதியை நோக்கிச்சென்றதாகவும் கூறப்படுகிறது

வாகனங்கள் பண்ணை சங்கிலிப்பாலத்தைக் கடந்துசுமார் ஒருமைல் வரை சென்றபோது திர்ப்பக்கத்திலிருந்து போராளிகள் தாககுதல் நடத்தியதாகவும் இதனல் நான்கு வாகனங்களும் இடைவழியில் திரும்பி[illegible] நோக்கி வந்ததாகவும் அப்போது பண்ணைப்பகுத்திலிருந்து போராளிகள் பலத்த தாக்குதல் நடத்திய தாகவும், பாலத்தின் நடுவில் வாகனங்கள் நின்று விட்டதாகவும் தெரியவருகிறது

இவற்றில் ஒருவாகனம் சங்கிலிப்பாலத்தை நெருங்கிய சமயம் போராளிகள் தாக்குதல் நடத்தவே அவ்வாகனம் 'றிவேர்சில்' சென்றதாகவும் நண்பகல் ஹெலிகொப்டர் ஒன்று அப்பகுதிக்கு வந்தபோது போராளிகள் அதனை நோக்கிச்சுட்டதால், ஹெலிகொப்டர் திரும்பிச் சென்றதாகவும் மேலும் தெரிய வருகிறது

கொட்டடி வில்லூன்றி மயானப் பகுதியிலும் அலுப்பாந்தி இறங்குதுறையிலும், நேற்றுக்காலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் நின்று பாலத்தில் நின்ற வாகனங்களைப்பார்வையிட்டனர். சிலர் காலை முதல் மாலைவரை அங்கிருந்து வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அலுப்பாந்தி இறங்கு துறை

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### குத்தகைக்கு

யாழ். வெலிங்டன் சந்தியில் கடைச்சல் தொழிற்சாலை குத்தகைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 129, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [C-2387]

### கல்வி

இந்தியாவில் உயர்கல்வி அல்லது தொழிற்கல்வி பயில விரும்புவோரும், G. C. E. (A/L) 3 பாடங்களுடன் B. Com பயிற்சி பெறவிரும்புவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஹரிஹரன் என்ரபிறைஸ். 337, பலாலி றோட், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C 2409)

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை பலாலிவீதியில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்பெறும். இ பொன்னம்மா, கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில். (C 2403)

### சேவை

காணி, அல்லது பொருட்களை வாங்கவோ அல்லது விற்கவோ விரும்புபவர்கள் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும். ஹரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி றோட், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C 2408)

### விற்பனைக்கு

உடுவில் ஆக் (Ark) லேனில் வீட்டுடன் 1½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S T. Watson, Ark Lane, Uduvil. (C 2412)

Formica சப்பாட்டு மேசை, கதிரைகள், Ceyesta மெத்தை கட்டில்கள், தேக்கு அலுமாரிகள், Steel Ice Flask, சில்வர் குத்துவிளக்கு, நிறைகுடம் மற்றும் பல உடன் விற்பனைக்கு. பத்மநாதன், ஆடிய பாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்குமிடையில், [C 2395]

உயர்விளைச்சலைபெற்று செய்கையாளரால் விரும்பி வாங்கும் பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. குறுகிய கையிருப்பு. ஒரு கிலோ 250-00. பிள்ளையார் மெர்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 2379]

### தேவை

யாழ். நகரில் புதிதாகஆரம்பிக்கப்படவுள்ள மருந்துப்பாக நிலயத்திற்கு இருபெண் உதவியாளர்கள் தேவை. (திருமணமாகாதவர்கள்), வைத்திய அனுபவம், கல்விபெற்றவர் விரும்பத்தக்கது. 22-05-86க்குள் விண்ணப்பிக்கவும். தொடர்பு கொள்ளும் முகவரி: வி. இல. C 2390, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 2390]

திருநெல்வேலியில் சாதாரண குடும்பத்தினர் வசிக்கக் கூடிய 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத்தேவை விபரங்களுடன்தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ஹரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி றோட், பரமேஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம். (C 2407)

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

உடுவில் சுன்னுகம் திருமதி பேற்றிஸ் இராசநாயகத்தின் மரணசாதன தத்துவ விடயத்தில்.

இறந்தவர்.

வழ.இல,ரி/3955

அருளம்பலம் தவத்துரை' 42, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஆனி மாதம் 06ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1986ம் ஆண்டு சித்திரை மாதம் 21ந்திகதி.

மன்றின் கட்டளைப்படி.

**கு. குலசிங்கம்.**
பதிவாளர்.

வரைதல்:
**செ. மகேசன்.**
மனுதாரின் சட்டத்தரணி.
(C 2347)

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் செம்மணி வீதியைச்சேர்ந்த கார்த்திகேசு கைம்பெண் அன்னபூரணத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக மரணச் சொத்து நிர்வாகப் பத்திரம் பெறும் விண்ணப்ப விடயத்தில்.

இறந்தவர்.

வழ. இல. ரி/3957

கார்த்திகேசு தர்மஜோதி, 131, செம்மணி றோட், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986 ம் ஆண்டு ஆனி மாதம் 13ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதி

மன்றின் கட்டளைப்படி.

**கு. குலசிங்கம்.**
பதிவாளர்.

வரைதல்:
**செ. மகேசன்.**
மனுதாரின் சட்டத்தரணி.
[C2348]

---

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப அலுவலகம் புங்குடுதீவு.

### ஏல விற்பனை

எமது உப அலுவலகத்தில் 1986-05-27ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கீழ்க்குறிக்கப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | பௌசர் ரயர்கள் | 10 |
| 2 | ராக்ரர் முன் ரயர்கள் | 4 |
| 3. | பழைய வெற்றுத் தார் பீப்பாக்கள் | 46 |
| 4. | மற்றும் பழைய பொருட்கள். | |

மேற்படி ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வோர் உடனடியாக முழுப் பணமும் செலுத்திப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பொ. வைரமுத்து,**
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

யாழ். மாவட்ட
அபிவிருத்திச் சபை,
உப அலுவலகம்,
புங்குடுதீவு.
13-05-1986. [A-678]

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சங்கானை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா செல்வராசா என்பவரின் மரணசாதனமற்றமரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல. ரி/265

சண்டியர் செல்லையா. தியேட்டரடி, சங்கானை

மனுதார்.

எதிராக

1. செல்லையா பெண் இராசம்மா.
2. சண்முகநாதன் கைம்பெண் செல்வராணி.
3. செல்லையா மகள் யோகராணி
4. செல்லையா மகள் யோகமலர்.
5. செல்லையா அசோகராசா.

பராய ) 6. செல்லையா விஜய
மற்ற ) சிறி.
வர்கள் ) 7. செல்லையா மகள் மஞ்சுளா (பராயமற்ற 6-ம், 7-ம் எதிர்மனுதார்கள் தங்கள் வழக்குப்பாது காவலர் 1-ம் எதிர்மனுதார் மூலம்) எல்லோரும் சங்கானை தியேட்டரடி, சங்கானை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு யூன் மாதம் 18-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்.**
பதிவாளர்.

**ந. தம்பிமுத்து,**
மனுதாரின் சட்டத்தரணி.
(C-2364)

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மல்லாகம் என்னுமிடத்தைச்சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பி இராசதுரை என்பவரின் மரண சாதனமற்ற மரணச்சொத்துக்கள் விடயத்தில்.

— மரணமெய்தியவர்.

இல. T/267

இராமுப்பிள்ளை தியாகராசா காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.

மனுதார்.

எதிராக

(பராயமற்றவர்)
1. இராசதுரை கோமாதா
2. தியாகராசா ஈஸ்வரி தேவி [பராயமற்ற 1ம் எதிர் மனுதாரின் பாதுகாவலர், காங்கேசன் துறை வீதி. மல்லாகம்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம்ஆண்டுவைகாசி மாதம் 28ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி,

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்

**ந. தம்பிமுத்து,**
மனுதாரின் சட்டத்தரணி.
C 2365

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஏழாலை சூராவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற வில்லியம் சைமன் யோசெவ் டேவிட் என்பவரின்மரணசாதனமில்லா மாணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

டேவிட் மகள் டொறின், சூராவத்தை சுன்னுகம்.

மனுதார்.

மாணசாதன
நியாயாதிக்கம்
இல. 252

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்வா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம்ஆண்டு தை மாதம் 15ம் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத் தப்படு கின்றீர்.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

1985ம்ஆண்டு கார்த்திகை மாதம் 29ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னல் எழுதப்பட்டது:

**செ. இராமலிங்கம்,**
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி.

15-1-1986 காரணம் காட்டும் திகதி 26-3-1986 வரை நீடிக்கப்பட்டது.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்.

26-3-1986 காரணம் காட்டும் திகதி21-5-1986வரைநீடிக்கப்பட்டது.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

[C-2397]

---

## VACANCY

### Stenographer (English)

Vacancy exists for an English Stenographer with at least 3 years experience and with minimum shorthand and typing speeds of 80 and 40 w p. m. Candidates should have G C E (O/L) with 3 or more credit passes including English.

Appointment will initially be on a one year con-tract and salary is negotiable. Apply with complete bio-data before 30-5 86

Director.
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
Vaddukoddai. [A-704]

---

## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர் மார்க்கமாக கப்பலில் (Ship) மாலுமிகளாக(Crews) செல்பவர்களுக்கும், சிங்கப்பூரில் வீட்டுப் பணிப்பெண்களாக (House maids) செல்ல விரும்புகிறவர்களுக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் அத்துடன்

பாஸ்போட் (PASSPORT) பொன்ட் (BOND)

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

தொடர்பு கொள்ளவும்:

**விஜயலங்கா எக்ஸ்போட்ஸ்**
அன்
**கொன்ராக்ஸ் கம்பனி**
**VIJAYALANKA EXPORTS**
**&**
**CONTRACTS COMPANY**

பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) (C 2389)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இனப்பிரச்னை——

# இந்திய மத்திய அமைச்சர்கள் எம். ஜி. ஆர். சென்னையில் சந்திப்பு

சென்னை, மே-18

இந்திய மத்திய அமைச்சர்களான திரு. பீ. வீ. நரசிம்மராவ், திரு. ப. சிதம்பரம் ஆகியோர் நேற்று முன் தினம் சென்னைக்குத் திடீர் விஜய மொன்றினை மேற்கொண்டு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைச் சந்தித்தனர். இவர்களுடன் கொள்கை வகுக்கும் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியும் சமுகமளித்தார்.

இச்சந்திப்பின்போது இனப் பிரச்னைத் தீர்வுக்கு இலங்கை அரசு தெரிவித்துள்ள திட்டங்கள்பற்றியும், அவை குறித்து இந்தியாவின் கருத்துக்கள்பற்றியும் தமிழக முதல்வருக்கு மத்திய அமைச்சர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ் அமைப்புக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவைத் தவிர்த்து சமரச நிலைமை ஏற்படவேண்டியதன் அவசியம் பற்றி இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதுடன் தமிழர் பகுதிகளில் பெருமளவிலான இராணுவ நடமாட்டம், இன ஒழிப்பு ஆகியவைகள்பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது. [ரா]

## ஆப்கானிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன!

### பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லமாபாத், மே 18

ஆப்கானிஸ்தானுக்கு சொந்தமான இரண்டு விமானங்களை பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியுள்ளது.

தமது பிரதேசத்துக்குள் நேற்றுமுன்னம் ஆப்கானிஸ்தானுக்குசொந்தமான நான்கு விமானங்கள் அத்துமீறி பிரவேசித்ததாகவும் அப்பொழுதே இந்த விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு காபூல் அரசாங்கத்துக்கும்முஸ்லிம்கிளர்ச்சி படையினருக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்ததின் பின்பு பாகிஸ்தானுல் ஆப்கானிஸ்தான் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதுஇதுவே முதல்தடவையாகும். (ரா)

## பட்டினி போக்க ஒலிம்பிக் பந்தம்

கிரீஸ், மே 18

ஆபிரிக்காவில் பட்டினியால் மடியும் குழந்தைகளை பாதுகாக்கும்வகையில் உலகளாவிய புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது

இந்த முயற்சியின் அடிப்படையில் சூடான் நாட்டைச் சேர்ந்த ஓட்டப்பந்தயக்காரரான திரு. ஓமர்சலீபா ஒலிம்பிக்பந்தமொன்றை எடுத்துச் சென்றுள்ளார்.

கிரேக்க அதிபரால்கையளிக்கப்பட்ட இந்த ஒலிம்பிக் பந்தம் எட்டு நாட்களின் தொடர் ஓட்டத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதியில் இம்மாதம் 25ம் திகதி நியூயோர்க்கில் ஐ. நா. தலைமைச் செயலரிடம் கையளிக்கப்படும். (ரா)

## "உண்மை வாழ்வு நிலையை நாம்கடைப்பிடிக்க வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

''நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் உருவாக்கிய பங்குக் கோயில்கள் அழிந்தொழிந்து விடாது தொடர்ந்து செயலாற்றச் செய்வதில் அமரர் யோசவ் வெற்றி கண்டார். இம் முயற்சியில் அவர் பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவரது கைம்மாறு கருதாத சேவைகளுக்குக் காணிக்கையாக நினைவு மலர் வெளியிடப்படுகிறது''

இவ்வாறு சமூகத் தொண்டர் இரா யோசவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் அன்றைது நினைவு மலரை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் ஆசிரியர் திரு. துரை ஆரோக்கியதாசன் குறிப்பிட்டார்.

இவ் வெளியீட்டு விழாவுக்கு யாழ் திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்திரு இரா யோசவ் அடிகள் தலைமை வகித்தார் யோசப் அடிகள் தமது தலைமையுரையில், ''அமரர் யோசப் வாழ்வு புதிர்கள் பல நிறைந்தது அவரது உண்மையான வாழ்வு நிலையை நாம் எமது வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும்'' என்றார்

அடுத்து அமல மரித் தியாகிகள் முதல்வர் லூயிஸ் பொன்னையா பேசுகையில், நீ என்னில் நிலைத்திருந்தால் நான் உன்னில் நிலைத்திருப்பேன் என்று மீட்பர் இயேசு கூறிய வாசகத்தை அமரர் தம் வாழ்வில் பிரதிபலித்தார் என்றார்.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் சாமுவேல் பெனடிக் ஆகியோரும் பேசினார்கள். (ஐ)

### புயல்தாக்கு: 13 பேர் பலி 50 பேர் காயம்

புதுடில்லி, மே 18

ராஜஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற புயல்காற்றில் 13 பேர் பலியாகியுள்ளதுடன் 50 பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

சுமார் 100 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதான இந்த புயற்காற்றில் 150க்கு மேலான வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மின்சார கம்பங்களும், மரங்களும் பெருமளவில் சாய்ந்து பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. (ரா)

உலகச் செய்திகள்

## உதவி அரச அதிபர் பிரதமலிகிதர் ஓராண்டு நினைவு

[வவனியா]

ஓராண்டுக்குமுன் கடமை நிமித்தம் கொழும்பு சென்று திரும்பும் வழியில் இடை நடுவில் அகால மரணமான வவனியா உதவி அரச அதிபர் திரு. ஆ குணநாயகம், பிரதம லிகிதர் திரு என். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஓராண்டு நினைவாக கடந்த புதன் கிழமை வவனியா ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு மதியஉணவு வழங்கப்பட்டது.

அத்துடன் 9 கிராமோதய சபைகளிலும் உள்ள இந்து கத்தோலிக்க கோவில்களில் விசேட பூசைகளும் இவர்களது நினைவாக நடாத்தப்பட்டது. வவனியா நகரில் உள்ள முஸ்லீம் பள்ளி வாசலிலும் விசேட தொழுகை இடம்பெற்றது.

## தென்னம்பிள்ளை விநியோகம்

[யாழ்ப்பாணம்]

நாளை செவ்வாய்க்கிழமை அன்று கீரிமலை கமநல சேவை நிலையத்தில் உள்ள தென்னம்பிள்ளை நாற்று மேடையிலிருந்து சுமார் 1500 நல்லின தென்னங்கன்றுகள் விற்கப்படும். இவ்விற்பனையை கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பாமலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

## ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சிரேஷ்ட அலுவலக உதவியாளராக கடமையாற்றிய திரு. சி. திருஞானம் தமது 35 வருட அரசசேவையிலிருந்து இம்மாதம் தொடக்கம் ஓய்வுபெற்றார். இவர் மன்னார், வவனியா மாவட்ட சுகாதார திணைக்கள அலுவலகங்களிலும் பணியாற்றியுள்ளார்.

## "நிபந்தனைகளின்றி நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்குக"

### இந்தியா, தான்ஸானியா வேண்டுகோள்

தாரஸலாம், மே 18

"நிபந்தனைகள் எதுவுமின்றி நமீபியாவுக்கு உடனடியாக சுதந்திரம் அளிக்கப்படுவதுடன் தென்னாபிரிக்கப் பிராந்தியத்தில் வெளியார் தலையீடுகளை முற்றும்முழுதாக நிறுத்த வேண்டும்'' என்று இந்தியாவும். தான்சானியாவும் கூட்டாக வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளன

நேற்றுமுன்தினம் தாரஸலமில் இந்தியப் பிரதமருக்கும் தான்சனியா அதிபர் அலி ஹசன் விவின்யூவிற்கும் இடையிலான சந்திப்பின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது

இனஒதுக்கலை முடிவுக்கு கொண்டுவர பிறிடோரியா அரசுக்கு எதிராக உலகநாடுகள் விரிவான கட்டாயத் தடைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இரு நாடுகளும் தெரிவித்தன

ஆபிரிக்க நாடுகளின் உறுதிப்பாட்டைக் குலைக்க தென்னாபிரிக்க அரசு செய்யும் எல்லா முயற்சிகளையும் இந்தியா எதிர்த்தே தீரும் என்று அங்கு கூறிய பிரதமர் திரு ராஜீவ்காந்தி தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு தீவிர ஆதரவு அளிக்குமாறும், இனவெறி அரசை ஆதரிப்போரை கண்டனம்செய்யுமாறும் உலக நாடுகளை வற்புறுத்தியுள்ளார்

இந்தியாவுக்கும் தான்சானியாவுக்கும் இடையிலான பொருளாதார, தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்பு வளர்முக நாடுகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும் என்றும் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்தார் (ரா)

## பனம்பொருள் உற்பத்தியில் பெண்கள் ஈடுபடல் அவசியம்

[மாவிட்டபுரம்]

''எமது பிரதேச மூலவளங்களை நாம் பயன்படுத்தி முன்னேறுவதன் மூலமே உண்மையான பொருளாதார சுதந்திரத்தை அடைய முடியும் இந்த முயற்சியில் பெண்மணிகளின் பங்கும் மிகவும் அவசியமானது.''

இவ்வாறு செல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவச்சங்க மகளிர் குழுவின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனம் பொருள் உற்பத்திக் கைப்பணி பயிற்சி நிலைய ஆரம்ப வைபவத்தில் கலந்துரையாற்றிய பனம் பொருள் அபிவிருத்திச்சபை பணிப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ். பாலசிங்கம் கூறினார்.

மகளிர் குழுத்தலைவி திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்நிலையம் பயிற்சி முடிவில் பனம் பொருள் உற்பத்தி நிலையமாக மாற்றமடையும் பனை உணவுப்பொருட்களும் பாவனைப் பொருட்களும் அழகுசாதனப் பொருட்களும் இன்று நவீன முறையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன இதன் அடிப்படையில் தான் பயிற்சியும் அளிக்கப்படுகிறது கிராமம்தோறும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு கண்காட்சிகளும் நடைபெறுகின்றன இப்பயிற்சியை ஒழுங்காகப் பயில்வோர் மாதம் 1000 ரூபாவரை சம்பாதிக்கும் வாய்ப்பு உண்டு ஆகவே இப்பயிற்சி நெறியில் பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் முன்வருதல் வேண்டும்'' என்றார்.

பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணி போதனாசிரியை திருமதி ம. பாலசிங்கம் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பபயிர்ச்சியில் 15 பயிற்சியாளர்கள் பங்கு பற்றினர்.

## உணவு முத்திரை பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு

(சுண்டுக்குளி)

வறுமை நிவாரண உணவு பெறுவதற்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களடங்கிய பட்டியல்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் ப. நோ. கூ. சங்க கிளைகளிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன

வறுமை நிவாரண உணவு முத்திரை பெற தகுதியிருந்தும் தமது பெயர் பட்டியலில் இல்லாதவர்களும், உணவு முத்திரை பெறதகுதி இல்லாதவர்களின் பெயர் பட்டியலில் இருந்தாலும் இது சம்பந்தமான முறைப்பாடுகளை இம்மாதம் 23-ந் திகதிக்கு முன் தமது பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி உணவு முத்திரைகளை பெற தகுதியுடைய குடும்பங்களுக்கு யூன் மாதம் உரியகாலத்தில் விநியோகிக்கப்படவிருப்பதாகவும இன்னும் சில நாட்களில் இவ் உணவு முத்திரைகள் கொழும்பிலிருந்து வந்து சேருமெனவும் யாழ் சமூகசேவை பகுதி உதவி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்

திறந்தபல்கலைக்கழகம்

## "புறக்கணிக்கப்பட்ட மாணவர்க்கு ஒரு வரப்பிரசாதம்"

[கொழும்பு]

நாட்டில் சமூக மாற்றம் போதனை மொழிகளில் மாற்றம் கல்விக் குறிக்கோள் மாற்றம் ஆகியன தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டதிறந்த பல்கலைக்கழகம் இன்று சமூக ரீதியில் புறக்கணிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.''

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்கில் நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய உயர்கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருமான பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே இவ்வாறு தெரிவித்வார்.

அவர் அங்கு பேசுகையில் இதுவரை 13,000 பேர் 17 பாடத்திட்டங்களிற்காக திறந்த பல்கலைக் கழகத்தில் பதிவு செய்துள்ளனர். ஆரம்பித்து ஆறு ஆண்டுகளில் பல சாதனைகளைப் புரிந்துள்ளதென்றும் கூறினார்.

இவ் வைபவத்தில் பல்கலைக் கழக வேந்தர் கலாநிதிகாமினி கொரியாவும் உரையாற்றினார் அங்கு நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் 502 மாணவர்களுக்கு கல்விமுதுமானி பட்ட டிப்பிளோமா பட்டம் வழங்கப்பட்டது (சிவ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

ஊதாரி ஒருவனுக்கு உபதேசம் செய்தேன். என் போதனை பலனளிக்கவில்லை. என்னுடைய சூடான மூச்சு அந்தக் குளிர்ந்த இரும்பில் உறைக்கவில்லை.

— சா அதி

# மயிலிட்டி துறைமுகம் திடீர் இராணுவ முகாமாக மாறியது

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி மீன்பிடித்துறை முகம் நேற்று முன்தினம் முழு நாளும் இராணுவத்தின் திடீர் முகாமாக மாறியதால் அப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்திற்கு நேற்றுமுன்தினம் காலையில்வந்துசேர்ந்தஇராணுவத்தினர் பகல் இரவு முழுவதும் அங்கு தங்கியிருந்தனர்.

அச்சமயம் ஹெலிகொப்டர் ஒன்றும் சுற்றிய வண்ணம் இருந்தது

பீதி காரணமாக அப்பகுதிக்கு போக்குவரத்துகள் எதுவும் நடைபெறவில்லை. அப் பகுதி மக்கள் பெரும் பீதியுடன்இருக்க நேர்ந்தது. அப் பகுதி வீடுகள் கட்டிடங்கள் ஆகியவற்றிற்குள்ளும் இராணுவத்தினர் தங்கியிருந்தனர். நேற்று காலையே அங்கிருந்து அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

இதற்கிடையில் மேற்படி மீன்பிடித் துறைமுகப் பகுதியில் வந்திறங்கிய ஹெலிகொப்டர் ஒன்று அப்பகுதிப் பிரஜைகள் குழு உறுப்பினர்களை விசாரணைக்காகப் பலாலிக்குக் கூட்டிச் சென்று பின்னர் கொண்டு வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# நமது நோக்கு

## ஊருக்கு நடக்கும் உபதேசங்கள்

'கோபம் கொள்ளாதே!' என்கிறார்கள் பெரியோர்கள். யார் கேட்கிறார்கள்?

கோபம் ஏற்படுவதனால் கோபிக்கப்படுகிறவருக்கு மட்டுமா துன்பம் ஏற்படுகின்றது? கோபம் கொள்பவருக்குத்தான் பெருந்துன்பம்.

கோபமேலீட்டினால் ஒருவர் இன்னொருவரைத் தாக்கிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம் அதன் பின்விளைவுகள் அம் மனிதரை நிம்மதி கொள்ளாது செய்துவிடுவதைக் காண்கின்றோம்.

தாக்கப்பட்டவர் பழி வாங்க முற்படுவாரானால் பிரச்னை முற்றி கோஷ்டி சண்டைகள் உருவாகி பலர் உயிர்துறக்கவும் நேர்ந்துவிடலாம். இத்தனைக்கும் முதல் மனிதர் கோபத்தை அடக்கியிருப்பின் விளைவுகளையும் அடக்கியிருக்க முடியும்.

இன்னும், கோபம், மனிதரின் உணர்ச்சி நரம்புகளைப் புடைக்கச்செய்து இருதய வேகத்தை அதிகரித்து சிந்தனையையும் மழுங்கடித்துவிடுகின்றது. இதனால் அவர் ஒருவித நோயாளியாகவும் மாறிவிட இடமுண்டு. இதுபோல் எத்தனையோ காரணங்களை உத்தேசித்துத்தான் சுருக்கமாக ''கோபத்தை அடக்கு'' என்றார்கள் பெரியோர்கள்.

கோபம் மட்டுமல்ல, மனிதனின் அன்றாட வாழ்வில் அவன் கடைப்பிடிக்க வேண்டிய சகலவிதமான யோசனைகளும், அறிவுரைகளும் பெரியோர்களால் வழங்கப்படுகின்றன.

கோயில் உபந்நியாசங்கள், கல்லூரி விழாக்கள், மற்றும் சமயச்சடங்குகளில் எல்லாம் இந்த உபதேசங்கள் வழங்கப்படுகின்றன.

சமய நூல்கள், பெரியோர் வரலாறுகள் எல்லாம் இவ்வாறு நமக்கு வழிகாட்டுவதற்கென்றே ஏற்பட்டவைதாம்.

இவைகளை இன்றைய உலகம் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. வெறும் ஆடம்பரமும், போலிப் பகட்டுகளுக்குமே இவை பயன்படுகின்றன. உலகுக்கு உபதேசம் புரிபவர்களே தாம் செய்யும் உபதேசத்தின்படி நடக்காதபோது உலகம் அவர்களை எங்ஙனம் பின்பற்றும்?

இன்னும் சில தினங்களில் புத்த பெருமான் உலகில் அவதரித்து ஞானம் பெற்று, பரிநிர்வாணம் அடைந்த தினமாகிய வெசாக் வைபவம் வருகின்றது. ஏனைய பௌத்தநாடுகளைப் போலன்றி நமது நாட்டில் மிகவிமரிசையாக இத்தினம் கொண்டாடப்படுவது வழக்கம். புத்தபெருமானின் போதனைகள் மிகப் புனிதமான முறையில்இங்குதான் பின்பற்றப்படுவதாகக்கூறப்படுகின்றது.

இது உண்மையாயின் இங்கு எழுந்துள்ள இனப் பிரச்னை எவ்வளவு உன்னதமான முறையில் மிக எளிதாகத் தீர்த்துவைத்திருக்க முடியும்?

அரசியல்வாதிகளே சமயத்தின் பாதுகாவலர்களாக இருக்கமுற்படுவதும், சமயவாதிகள் அரசியலுக்குள் புகுந்துவிடுவதும் இந்நாட்டின் தேசியப்பிரச்னையொன்று மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டமைக்குக் காரணமாகியுள்ளது. அன்புமயமான பெரியோரின் உபதேசங்களை எவர்தான் பின்பற்றுகிறார்கள்?

புரையோடிப்போனஇந்த புண்ணை ஆற்றுவது யார்? வழிதான் என்ன? அறுவை சிகிச்சைதான் ஒரேவழி என்ற நிலைக்குள்ளும் எத்தனை சிக்கல்கள்!

இந்தச் சட்டத்தில்வெசாக் தினத்தையொட்டி பிரதம மந்திரி திரு. பிரேமதாசா அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு செய்தி பலரின் புருவங்களை ஆச்சரியத்தினால் உயர்த்திவிட்டுள்ளது.

புத்தபெருமான் உயிர் வாழ்ந்த காலத்தில் சாக்கியர்களுக்கும் கௌலியர்களுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையின்போது அவ்விரு இனத்தவரையும் அழைத்து உபதேசம்புரிந்த பெருமான் மனிதாபிமானத்தின் அடிப்படையில் தம் நாட்டின் ஒரு பகுதியைக் கௌலியர் விட்டுக்கொடுக்க வேண்டும் என திருவாய் மலர்ந்தருளினார் என திரு. பிரேமதாசா கூறியிருக்கிறார்.

இந்த உபதேசத்தை திரு பிரேமதாசா இப்போதைய சூழ்நிலையில் சுட்டிக் காட்டியிருப்பதானது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றிவைக்க சிங்கள மக்களைத் தூண்டிவிடும்முயற்சி என்று பொதுவாகக் கருதப்படலாம்.

ஆனாலும் இந்த உபதேசங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு செயல்படும் அளவுக்கு யார் இருக்கிறார்கள்? காலம் தாழ்த்தியாகிலும் இம்மாதிரியான சிந்தனைசிங்கள மக்கள் மத்தியில் உதயமாவது வரவேற்கத்தக்கதே.

# 'பிரஜாஉரிமை சம்பந்தமாக மோசடிக்கும்பலில் ஏமாற வேண்டாம்"

## வவனியா இ. தொ. கா. பொறுப்பாளர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

பிரஜா உரிமை சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் இ.தொ.காங்கிரஸ் எடுத்து வருகிறது. எனவே,மோசடிக் கும்பலை நம்பி எவரும் ஏமாற வேண்டாம். இவ்வாறு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் வவனியா மாநிலப் பொறுப்பாளர் திரு. எஸ். மதுரபிள்ளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ''இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்து இதுநாள்வரை கிடைக்காதவர்கள் 15-06-1986ம் திகதிக்கு முன்பாகத் தம்முடன் தொடர்புகொண்டு கடிதம் அனுப்ப வேண்டுமென ஒரு மோசடிக்கும்பல் கூறிக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று பணம் வசூலிப்பதாக எமக்குச் செய்திகிடைத்துள்ளது. இவ்வாறு காலக்கெடு அரசாங்கத்தால் விதிக்கப்படவில்லை என்பதனை முதலில் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் எமது காங்கிரஸ் சார்பாக இது சம்பந்தமாக எவரையும் நாம் நியமிக்கவில்லை என்பதனையும் தெரிவிக்கிறோம்:

எனவே, பிரஜாவுரிமைபெற மனுச் செய்தவர்கள் இது சம்பந்தமான அறிவுரை தேவைப்பட்டால் சம்முடன் தொடர்புகொள்ளும்படிவேண்டுகின்றோம். மோசடிக்காரரர்களை நம்பி ஏமாறுபவர்களுக்கு நாம்பொறுப்பாளிகளல்ல என்பதனையும் தெரிவிக்கின்றோம். [ஐ]

# வீடமைப்புக் கடன் மந்தகதியில்!

[சித்தங்கேணி]

யாழ் மாவட்டத்தில் வீடமைப்புக்கடன் வேலைகள் மந்தகதியில் நடைபெறுவதுடன் கடந்த வருடம்போல இவ்வருடமும் ஒதுக்கப்பட்ட பணம் திரும்பிச்செல்லும் நிலையேற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர்வீடமைப்புக்கடனை வழங்கிவருகின்றனர். இவற்றுக்கு பொறுப்பாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒவ்வொரு வீடமைப்பு உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகபிரயாணப்படி வழங்கப்படாமையினால் இவர்கள் முன்னர்போல கடமையாற்றாமல் இருப்பதினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம்உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 20 லட்சம் ரூபா குறிப்பிட்ட காலத்தில் வேலைகளை முடிக்காமையினால் திரும்பப்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்புக்கடன்பெறுவோர் தொகை வீழ்ச்சி!

[வவனியா]

செட்டிக்குளம் பகுதியில் குறைந்த செலவிலான வீடமைப்புத்திட்டத்திற்கு கடன் வழங்கப்பட்ட போதும் கடன் பெறுவோர் விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இப் பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து போனதே இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாமென மாங்குளம் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் செட்டிக்குளம் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இணைப்பு மாநாட்டில் பேசுகையிலேயே இத் தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்:

ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் செலவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசினுடைய சட்ட திட்டங்களுக்கு நாம் கீழ் படிய வேண்டியவர்களாய் உள்ளோம் எனக் கூறினார்

பாதிக்கப்பட்ட மக்கள் மீளவும் கடனைச் செலுத்த சில சலுகைகளையும், கால அவகாசத்தினையும் அளிக்க உத்தேசித்துள்ளோம் என்றும் திரு. சாந்தலிங்கம் இங்குகுறிப்பிட்டார்.

## மிளகாய் கொள்வனவு

[உடுவில்]

பொதுமக்களிடமும் விவசாயிகளிடமும் இருந்து செத்தல் மிளகாயைக் கொள்வனவு செய்வதற்குச் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## பாராது நீயிருந்தால் உன்தனுக்கழகாமோ?

ராகம்: லதாங்கி    தாளம்: ஆதி

பல்லவி

ஒருதரம் பார்த்தாலும் போதுமையா—என்னை
வருத்தும் வினையாவும் போகுமையா—கேதீசா
[ஒருத..]

அனுபல்லவி

தீராத துயராலே வாடுகின்றேன் ஐயா!
பாராது நீயிருந்தால் உன்தனுக் கழகாமோ?
[ஒருத...]

சரணம்

சீராட்டிப் பாராட்டும் பெற்றவர் நீதானே!
சீரான அறிவூட்டும் சற்குரு நீதானே!!
தீராத வினைப்பாக்கித் தெவிட்டாத அருளூட்டும்
பேராளன் நீயல்லால் யாருள்ளார் கேதீசா!!
[ஒருத...]

— முருகு

# அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் விநியோகம்

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு இவ் வருட இரண்டாம் காலாண்டிற்கான மருந்து வகைகளை நேரடியாகக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது

இம் மாதம் செவ்வாய்க் கிழமை 20ம் திகதி கோப்பாய், புத்தூர், அச்சுவேலி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளிலுள்ள அரசினர் வைத்தியசாலை களுக்கும் 21ம்திகதி புதன்கிழமை அம்பன் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய வைத்திய சாலைகளுக்கும், இம் மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, ஆகிய வைத்திய சாலைகளுக்கும் 28ம் திகதி புதன் கிழமை பளை, மருதங்கேணி, புள்ளியான், ஆனையிறவு, கண்டாவளை, தர்ம ரம் கிளிநொச்சி ஆகிய வைத்திய சாலைகளுக்கும் 29ம் திகதி வியாழக் கிழமை உருத்திரபுரம், வட்டக்கச்சி, அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் ஆகிய வைத்திய சாலைகளுக்கும், 30 ம் திகதியன்று பூநகரி, வேரவில், கரியாலை, நாகபடுவான், இரணைதீவு ஆகிய வைத்திய சாலைகளுக்கும் மருந்துகள் விநியோகிக்கப் படவுள்ளன.

அடுத்த மாதம் 3ம் திகதி இணுவில், உடுவில், சுன்னாகம், அளவெட்டி, ஏழாலை, காங்கேசன்துறை, தெல்லிப்பழை ஆகிய வைத்தியசாலைகளுக்கும் 4 ம் திகதி கொக்குவில், கொண்டாவில், உரும்பராய், புன்னாலைக்கட்டுவன், பலாலி ஆகிய அரசினர் வைத்திய சாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி சேவை:
## த. மா. பேரவை இறுதி எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

"நமது பிரதேசத்தின் நெருக்கடிமிக்க இவ்வேளையில் சூழ்நிலைகளைச் சாதகமாக வைத்துக்கொண்டு எமது பிரச்னைகள் பற்றிய எதுவித தீர்க்கமான பார்வையுமில்லாது வெறுமனே போட்டி மனப்பான்மையிலும் சுய விளம்பரத் தன்மையிலும், தொலைக்காட்சிச் சேவைகளை ஒழுங்கற்றமுறையில் தன்னிச்சையாக நடத்தும் சேவையாளர்கள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இவர்கள்மீது எமது தோழர்கள் தீவிர கண்காணிப்பினை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்தும் உள்ளூர்த் தொலைக்காட்சிச் சேவைகள் பிழையாக இருக்குமானால் இச்சேவைகளை நிறுத்துடவதுடன் இதற்குப் பயன்படுத்தப்படும் உபகாரணங்களையும் பறிமுதல் செய்ய நாம் தீர்மானித்துள்ளோம்" என்று தமிழீழ மாணவர் பேரவை உள்ளூர் தொலைக்காட்சி சேவையாளர்களுக்கு விடுத்த அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் சகல உள்ளூர் தொலைகாட்சி சேவைகளை ஒரு கட்டமைப்புக்குள் இயங்க வைத்து அதன்மூலம் நல்லதொரு சேவையை மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை தமிழீழ மாணவர் பேரவை எடுத்து வருகின்ற இவ்வேளையில் சில சேவையாளரின் தவறான நடவடிக்கைகள் இம்முயற்சிகளுக்கு தடையாகத் தோன்றுகின்றன. ஆகவே சகல சேவையாளர்களும் இதற்கென உருவாகியுள்ள கட்டமைப்பினூடாக ஒழுங்கமைப்பில் தமது சேவைகளை வழங்குமாறு வேண்டுகிறோம். இதுவே இச்சேவையாளருக்கு நா தரும் இறுதி அறிவித்தலாகும்"

(து)


**எம்பயர் திரையில்**
விஜயகாந்த் கவுண்டர்
**வைதேகி**
**காந்திருந்தாள்**

**லிடோ Jaffna**
10-30, 2-30, 4-30 6-30
VICTORY AT ENTEBBE
[Full of Airport Attack]
(உகண்ட விமானநிலைய நேரடித் தாக்குதல்]

**வெலிங்டன**
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர். புதிய பிரதி)

**லிபேட்டி சினிமாவில்**
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
007 DR-NO புகழ் பிரபல நடிகர்கள் நடித்த
**Border**
மெக்சிக்கோ எல்லையில் கொள்ளைக் கூட்டத்தினரும், அவர்களின் அழகிய காதலிகளும், பொலிசாரின் கெடுபிடிகளின் இடையே மின்னல் வேகத்தில் காரில் தப்பும் கொள்ளையர்களின் முடிவு......
10-00, 2-00,
4-15, 6-30
வயது வந்தவர்களுக்கு மட்டும்.


## வல்வை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரு தடவைகள் ஹெலிகொப்டர் மூலமாக இராணுவத்தினரைக் கொண்டுவந்து இறக்கிய சமயம் போராளிகள் ஹெலிகொப்டர்மீது தாக்குதல் மேற்கொண்டனர். ஆயினும் சேதம் ஏற்படவில்லை.

## நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி]

ச்சோடிக்கிடந்தது.

வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. வ. போ. ச பஸ் சேவை, மினிபஸ்சேவை வழக்கத்திலும் பார்க்க குறைவாக இருந்தன.

பளைக்கு அப்பால் வாசன சேவை தடைப்பட்டிருந்ததினால் நேற்றுக்காலை புறப்பட்ட சிலபஸ்கள் பளையுடன் திரும்பின. நேற்று முழுவதும் குண்டிச்சத்தங்களும் துப்பாக்கிச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

## இலங்கை ..

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை இனப்பிரச்னைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வுகாண இலங்கை சமர்ப்பித்த ஆலோசனைகளுக்குரிய மேலதிக விளக்கங்கள் இனப் பிரச்னைவிஷயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் போக்கத் தவறிவிட்டன எனத் தெரியவருகிறது.

இலங்கைத் தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றும் பொருட்டு நியாயமான அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய முன்வருமாறு திரு காந்தி திரு ஜெயவர்த்தனவிடம் கேட்டுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான விசேட செய்தி ஒன்றும் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் மூலம் இலங்கை அரசிடம் கையளிக்கப்படும் எனவும் நம்பப்படுகிறது.

## பேராசிரியர் சோ. செ. நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு இம்மாதம் 21-ம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இலங்கை அறிவிப்பு

இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கினாலொழிய இனப் பிரச்னை சம்பந்தமாக தான் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளுக்கு மேலதிக விளங்கங்கள் எதையும் சமர்ப்பிக்கப் போவதில்லை என இலங்கை அறிவித்துள்ளது.

நிர்வாக சீர்திருத்தத்திற்கான இந்திய மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரத்தை நேற்று சந்தித் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. பேர்னாட் திலகரத்தின இதனைத் தெரிவித்தார். (செ)


**பிறீ மல்ரி சேவீஸ்**
**PREE MULTI - SERVICE**
**திருமண சேவை**

பொறியியலாளர், டாக்டர், கணக்காளர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர், சுமநல முதல்வர் மற்றும் பலரின் இருபாலாரையும் உள்ளடக்கிய சாதகக்குறிப்புகள் எம்மிடம் உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி:

சி. பத்மநாதன்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
[மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில்]
[C 2417]

**பிரயாண ஒழுங்குகள்**
★ கனடா ★ பிரான்ஸ்
★ டென்மார்க்
ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் மே 25ந் திகதி அழைத்துச்செல்வார்.
மற்றும்
**பாஸ்போட், பொன்ட் (BOND),**
**விசா, ரிக்கற்**
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்:
**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.
A 606


## திரிசங்கு .:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து பார்த்தவர்களுக்கு வாகனங்களும் ஆட்களின் உருவங்களும் தெளிவாகத் தெரியக்கூடியதாயிருந்தது.

நேற்றுமாலை அலுப்பாந்தி இறங்குதுறையில் வெளியிடங்களிலிருந்தும் பலர் வந்து நின்று வாகனங்களைப் பார்வையிட்டனர்.

பிற்பகல் 3 மணிக்கு 3 வாகனங்கள் பின்னுக்கும் ஒருவாகனம் முன்னுக்கும் நின்றன மாலை 6 மணியளவில் பின்னுக்குநின்ற ட்ரக் சங்கிலிப் பாலம்வரை வந்தபோது போராளிகள் தக்குதல் நடத்தியகால் முன்னேறமுடியவில்லை பின்னர் டரக் பின் நோக்கிச்சென்று மற்றும் வாகனங்களுடன் நின்றது

மாலை 6-30 மணியளவில் சூரியன் அடிவானத்தில் மறைந்ததும் இருள் சூழ்ந்து கொண்டதால், வாகனங்கள் தெளிவாகத் தெரியவில்லை இரவு 7 மணுக்குப்பின்னர் எங்கும் இருள்சூழ்ந்ததினால் பாலப்பகுதியும் தெளிவாகத் தெரியவில்லை. இதன் பின்னரும் சிலர் அலுப்பாந்தியில் நின்று பார்த்துக்கொண்டு [illegible] காணக்கூடியதா[illegible]

# இவ்வாரம் முதல்
## வவனியா வரை ரயில்?

[வவனியா]

தற்போது நடைபெற்றுவரும் கொழும்பு அனுராதபுரம் ரயில் சேவை இவ்வாரம் முதல் வவனியா வரை நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் மாத இறுதியில் ஓமந்தையில் யாழ்தேவி எரிக்கப்பட்டபின் பாதுகாப்புக் காரணங்களுக்காக இச்சேவை அனுராதபுரம் வரையுமே நடத்தப்பட்டு வருகின்றது.

எனினும் வவனியா புகையிரத நிலையத்துக்கருகாமையில் பொலிஸ்-ராணுவக்கூட்டு முகாம் ஒன்று அமைந்திருப்பதனால் ரயில்சேவையை வவனியா வரை நீடிக்கலாம் என ரயில்வே திணைக்களத்தில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## கோயம்புத்தூர் இலங்கைத் தமிழ் அகதிகளை அமைச்சர் பார்வையிட்டார்

[சென்னை]

கோயம்புத்தூர் நகரிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வதியும் நான்கு முகாம்களைத் தமிழக மாநில மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. ராமசாமி நேற்றுப் பார்வையிட்டார்.

நூற்றுஒன்பது இலங்கை அகதிகள்குடும்பங்களைச் சேர்ந்த நானூற்று எழுபத்தைந்து பேரை அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தற்காலிக சமையல் கூடம் அமைத்துத்தருமாறு அகதிகள்அமைச்சரிடம் கேட்டனர்.

நான்கு முகாம்களிலும் சமையல் கூடங்கள் அமைக்கவும், இந்தியா வந்த பின் பிறந்த குழந்தைகளைப் பதிவு செய்யவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார். [து]

## நடைபாதை வியாபாரத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதியில் உள்ள லொறி நிலையத்தில், நடைபாதை வியாபாரிகளுக்கு 25 அடி நீளமான நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

லொறி உரிமையாளர்களை, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் சந்தித்தபின் இந்த நிலம் ஒதுக்கப்பட்டது.

இந்நிலையத்தில் நடைபாதை வியாபாரிகளுக்கு மூன்று நிரைகளில் கடைகள் அமைக்க வசதி செய்யப்படும்.

இன்று முதல் இவ்விடத்தில், நடைபாதை வியாபாரிகளின் கடைகள் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## இயக்க முன்னாள் முக்கியஸ்தர் கொலை

[மட்டக்களப்பு]

தமிழ்ப்போராளி இயக்க மொன்றின் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முக்கியஸ்தர் ஒருவர் நேற்றுக்கொலை செய்யப் பட்டதாகத் தெரிய வருகிறது.

அவ்வியக்கத்தைவிட்டு விலகிய இவர் பல இயக்க முக்கியஸ்தர்களைக்காட்டிக் கொடுத்தாரென்றும் அண்மையில் அங்கு நடந்த சில 'சுற்றிவளைப்பு' நடவடிக்கைகளுக்கு இவரே காரணகர்த்தா எனவும் கூறப்படுகின்றது.

இவரின் கொலையை யடுத்து அப்பகுதியில் பெரும்பதற்றம் நிலவுவதாகத் தெரிய வருகிறது.

## யாழ். வந்த---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தூரத்துக்கப்பால் அவர் பொலிஸாரால் திரும்பிஅனுப்பப்பட்டார்.

இதனிடையே கிளிநொச்சியிலிருந்து வவனியா நோக்கிச் சென்ற பஸ் ஒன்று இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்-வவனியா பஸ்சேவையும் நேற்று நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்தும் நேற்றும் முன்திம்மும் வெளிம வட்டங்களுக்கு பஸ்சேவை இடம்பெறவில்லை. (செ)

## வசந்த மண்டபம் புனரமைப்பு

[சுழிபுரம்]

"புதிய ஆலயங்கள் கட்டுவதிலும் பார்க்க பழைய ஆலயங்களை புதுப் பொலிவடையச் செய்வது மிகவும் பொருத்தமாகும் ஆறுமுக நாவலரும் இவற்றையே எமக்குப் போதித்தார் இறைவி இருக்கும் ஆலயம் மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் அமைந்து கொண்டால் எங்கள் வாழ்வு ஒளிமயமாக விளங்கும். இன்று எமக்கு பெரும் துன்பங்கள் ஏற்பட்டாலும் துன்பத்தைத தாண்டி இன்பம் அடைவோம்', இவ்வாறு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வழக்கம்பரை அம்மன் கோவில் புனருத்தாரண வசந்த மண்டபத்தை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சபைச் செயலாளர் திரு. சி. ஞானச்சந்திரமூர்த்தி தலைமையில் திறப்பு விழா வைபவம் நடைபெற்றது. பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் இவ் வைபவத்தில் பங்கு கொண்டனர்.

## பாடசாலை விளையாட்டுப் போட்டி

[மானிப்பாய்]

மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் ரோ. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி வரும் புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ச தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் பங்குத்ந்தை வண. பஸ்தியாம்பிள்ளை அடிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. வே. மகேசவேல், மானிப்பாய் மகளிர் இந்துக்கல்லூரி அதிபர் திருமதி பி. இராசநாயகிம் ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைப்பாறிய கலால் அத்தியட்சகர்

காரைநகரைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் கந்தசாமி யாழ்ப்பாணம் கலால் அத்தியட்சராகக் கடமையாற்றி இளைப்பாறி உள்ளார். இவர் ஒரு சிறந்த பண்பாளர். பழகுவதற்கு இனியவர். கடமை கட்டுப்பாடு, கண்ணியம் என்னும் தாரக மந்திரத்தைக் கடைப்பிடித்து எல்லோருடைய மதிப்பையும் பெற்றவர் செயலில் வல்லவர். இனிய இதயம் படைத்தவர். ஈஸ்வர ஈடுபாடும் விரத வழிபாடும் வாழ்க்கையில் கண்டிப்பாக கடைப்பிடித்தவர். முருகனிடத்தில் மேலான பற்றுடையவர்.

இவர் 1951 இல் கலால் பகுதிப் பரிசோதகராகச் சேர்ந்து நேர்மை, விசுவாசம், திறமை பெருந்தக்கன் கடமையைச் செவ்வனே செய்து படிப்படியாக உயர்வுகள் பெற்று இறுதியாக அத்தியட்சகர் பதவியை அடைந்து ஓய்வு பெற்றுள்ளார். வடக்கிலும் தெற்கிலும் பல மாவட்டங்களில் சிறப்புறத் தன் கடமைகளை ஆற்றி எங்கும் மதிப்பும் பெற்றார். தாம் பதவி வகித்த 35 வருட காலமும் சிங்கள, தமிழ் மக்களிடம் அன்பு, சிநேகம், பண்பு, கடப்பாடு அமைய வாழ்ந்து நற்பெயரைத் தேடிக்கொண்டார். இலவச மரவரிமுறைதான் நாட்டிற்கு நன்மை பயக்குமென 1972 ல் கருத்து வெளியிட்டார் நல்லவற்றை நயந்து செய்யும் பண்பும் ஓயாது உழைப்பதும் நேரம் தவறாது கருமம் மாற்றுவதும் இவரது குணங்கள் என்பதை இவருடன் பழகிய எவரும் அறிவர்.

இவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தன் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சமய, சமூகத் தொண்டாற்றுவதற்கு நல்லூரான் அருள் என்றும் அவருக்கு உண்டு.

வி. ஆனந்த நடராஜா.

# ஜனாதிபதி ஆணைக்குழுமுன் 300க்கு மேல் முறையீடுகள்

[கொழும்பு]

அரசியல்வாதிகள் உயரதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகம், ஊழல்கள் பற்றிய மக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட விஷேச ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை 300க்கு மேற்பட்ட முறையீடுகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இம்முறைப்பாடுகள் யாவும் கூட்டுத்தாபன அதிகாரிகளின் மீதே தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. [ரா]

## மார்பு நோயாளருக்கு கிட்டிய மருத்துவ சேவை!

[யாழ்ப்பாணம்]

பண்ணை மார்பு நோய் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் தூர இடத்து நோயாளிகளை அப்பகுதிக்கே சென்று பார்வையிட்டு சிகிச்சையளிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதன்படி தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் மாதாந்தம் முதல் செவ்வாயன்றும் மூன்றாவது செவ்வாயன்றும் நோயாளிகளை மார்பு நோய் நிபுணர்கள் பார்வையிடுவர். இதே வகையில் மாதத்தின் 2வது செவ்வாயும் 4வது செவ்வாயும் மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளிகளை மார்பு நோய் மருத்துவ நிபுணர்கள் பார்வையிடுவர்.

## கொள்ளை

[யாழ்ப்பாணம்]

வேலி பிரித்தும், மதிலை உடைத்தும் உட்புகுந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் வீட்டில் இருந்த பொருட்களையும் பணத்தையும் கொள்ளையடித்ததுடன் கட்டிநின்ற நல்லின மாடு ஒன்றையும் பிடித்துச் சென்றுள்ளனராம்,

ஏழாலையிலுள்ள சி. அருச்சுனன் என்பவர் வீட்டிலேயே இக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. வீட்டுக்காரர் எவரும் வீட்டில் இல்லாத மாலைநேரமே இக் கொள்ளை நடந்ததாம். [ஐ]

## 'வெள்ளி விழா" கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்த்தர் சங்கம், தனது 25வது வருட வெள்ளி விழாவைக் கொண்டாடுமுகமாக யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

வெள்ளிவிழாக் கோப்பைக்கான இக்கிரிக்கெட் போட்டி 30- ஓவர்களைக் கொண்டதாக இருக்கும் போட்டி கிரிக்கெட்போட்டி இம்மாதம் 22ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், மேற்படி சங்கத்தின் போட்டிக்குழுக் காரியதரிசி திரு. இ. செல்வரத்தினம் செய்து வருகின்றார். [வி]

## உரிமை கோராத சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு பொன்னாலை வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையிலிருந்த சைக்கிள் வண்டி ஒன்றினை த. செல்வராசா என்பவர் கண்டெடுத்து மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். இருவாரங்களாகியும் இச்சைக்கிளை எவரும் உரிமைகோரவில்லை எனத்தெரிகிறது.

## ராம கிருஷ்ணலயத்தில் மீண்டும் அந்தர் யோகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தில் 2ம் தடவையாக அந்தர் யோகம் எதிர் வரும் 24 ம்திகதி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா அவர்களால் ஆரம்பித்து நடாத்தப்படவுள்ளது.

இவ் வாழ்க்கை முறைப் பயிற்சி நெறியில் தியானம் மௌனம், சத்சங்கம் நாம பஜனை, சந்தேகம் தெளிதல், கூட்டு வழிபாடு, பூஜை என்பன இடம் பெறுவதுடன் ஆத்மஜோதி நா. முத்தையாவின் விரிவுரையும் இடம் பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து பயனடைய விரும்புபவர்கள் முற் கூட்டியே தங்களைப்பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். கலந்து கொள்பவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்படுவதுடன் அண்மைக்கால கலவரங்களில் பாதிக்கப்பட்டு ராமகிருஷ்ணலயத்தில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு உப உணவுப் பொருள்கள் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தால் ராமகிருஷ்ணலயத்தில்வைத்து வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாம்பு தீண்டி மரணம்

[சாவகச்சேரி]

மட்டுவில் வடக்கினைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முருகண்டிவாசியுமான திரு. சி. இராசையா (மணியம்) என்பவர் முறிகண்டி கமத்தில் ரத்தப்புடையன் பாம்பு கடித்து, யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவரது மூத்தஆண் குழந்தையும் சுமார் இருவருடங்களுக்கு முன்னர் முறிகண்டியில் விஷப்பாம்பு கடித்து மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்மணி அம்மாள்



வாழும்போது நல்ல பெயர் கேட்பவர்கள் மிக அரிது. திருமதி சீனிவாசகம் கண்மணி அம்மாள் இறப்பதற்கு முன்னும் நல்லவள் என்று பெயர் பெற்றவர். ஆம், அவர் தம் உற்றார்க்கும் உறவினர்க்கும் அயலவாக்கும் நல்லவளாய் வாழ்ந்து இறந்தார்.

கண்மணியம்மாளை ஒரு சமூக சேவகி என்றோ ஆன்மிக சேவகி என்றோ சொல்வதற்கில்லை. ஆனாலும் அவர்தம் அடக்கம்மிக்க மக்கட் தொண்டும் கடவுட் தொண்டும் புகழ்தற்குரியன. பசிமுகம் பாராத பழக்கமும் பகிர்ந்துண்ணும் பண்புமுமுடையவர். இறக்கும் வரை முருகன் திருநாமம் மறக்காதவர்

காங்கேசன் துறையில் பிறந்து திருநெல்வேலியில் மணமுடித்துப் புகுந்தகத்தார்க்கும் ஊருக்கும் நல்லவளாய் வாழ்ந்து நல்லவள் என்ற பெயருடன் தமது 68 வயதில் மறைந்த கண்மணியம்மாள பழகியோர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பார்.

-அன்பி


# கோல் 2ஈ.




கோல் 2ஈ களைநாசினியைப் பாவித்து நெற்பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் நெற்சப்பி, கோழிச்சூடான் போன்ற சகல களைகளையும், வெங்காயம், உழுந்து போன்ற பயிர்களுடன்

போட்டியிட்டு வளரும் பசளி, போன்ற சகல களைகளையும் முற்றாக அழித்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்.

கோல் 2ஈ களைகள் முளைக்க முன் கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த களைநாசினியாகும்.

CIC
கெமிக்கல் இன்டஸ்ட்றீஸ் (கொழும்பு) லிமிட்டேட்
த.பெ. எண் 352, கொழும்பு. 100 மி.லி. - ரூ. 80/- ... - ரூ. 150/-

[A-483]

# பிரயாண ஒழுங்கு டென்மார்க்

எமது முகவர்
இம்மாதம் 24-ம் திகதி
குறைந்த செலவில்
டென்மார்க் அழைத்துச் செல்வார்.
அத்துடன
சவுதி அரேபியா, மலேசியா, கிளினேஸ்க்கு
உடன் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
மற்றும்
பாஸ்போட், விசா, BOND, ரிக்கற்
முதலியன உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES
யூனிவேசல் ஏஜென்சி
(பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக)
125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஆயுள்வேதக் கல்லூரி அருகாமை

A 2405


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 5 [19 - 5 - 1986]
கிழமை- திங்கள்
திதி- தசமி
பி. ப. வரை
நக்ஷத்திரம்- உத்தரம்
மு. இ வரை

மேடம்: சிரிந்துப் பேசியவர்கள் இன்று சீறி விழுவார்கள். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

இடபம்: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு புண்ணிய காரியங்களை மனம் நாடும் நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகும்.

மிதுனம்: வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழிற்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகளும் பணிவர்.

கடகம்; வசதிகள் பெருகும் வாழ்விலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். எண்ணிய விடயம் நல்ல முடிவைத் தரும்.

சிங்கம், எதிர்பாராத வகையில் பணம் விரயமாகும் வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். சிந்தனையில் குழப்பநிலை ஏற்படும்.

கன்னி: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகும் உடல் நலமும் குன்றும்.

துலாம்: எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும். நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவர். சாந்தகுணம் சிறப்பைத் தரும்.

விருச்சிகம்; இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிக்க இடம்உண்டு. எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

தனுசு: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும். உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

மகரம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும்.

கும்பம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும் உணவு விடயத்தில் அதிக கவனம் நன்று வேவுசுணைகளைத் தொடுட்பகற்கு எதிரிகள் காத்திருப்பர்.

மீனம்: களஸ்திரவழியால் மகிழ்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். காதலர் வாழ்வில் திக்கிப்பான சம்பவங்கள் நடைபெறும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

**கவிப்பிரியா (கவினு)**

சரவணை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி- விருத்த சலாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வி கவிப்பிரியா (கவினு) (19-05-86) தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனதில்லத்தில் கொண்டாடுகிறர். இவரைஅப்பா, அம்மா, ஆச்சி, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார் குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், மாமா, அத்தை, ஸ்ரீஅன்ரி, அண்ணமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் வவனியா சிவபாலன் மாமாகுடும்பத்தினர், வவுனியா மில் மகாதேவன்மாமா ஆகியோர் கர்ணந்தோட்டம் கந்தசாமியாரின் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(C 2400)

## இரத்தம் வழங்கினர்

(புலோலி)

வைத்தியசாலைகளில் அபிவிருத்திச்சபை வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறை கல்வி வளர்ச்சிக் கழகத்தைச்சேர்ந்த பத்து இளைஞர்களும் நவிண்டில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலைய தொண்டர்களான ஐந்து யுவதிகளும் மந்திகை அரசினர் வைத்தியசாலை இரத்தவங்கிக்கு இரத்த தானம் செய்தனர்.

# "காங்கேசன் கத்தோலிக்க வரலாற்று மலர் வெளியீடு"

[பண்டத்தரிப்பு]

''காங்கேசன் கத்தோலிக்க ஆலயங்களின் வரலாறு என்னும் நூல் இன்றைய காலகட்டத்தில் அவசியம் வெளியிடப்படவேண்டிய தொன்றாகும். கேவாலயங்களின் வரலாறுகளை எதிர்கால இளம் சந்ததியினர் அறிந்துகொள்ளவும், இறைப்பணிபற்றி அறிந்து கொள்ளவும் இதுபோன்ற வரலாற்று நூல்கள் அவசியமானதாகும் ''

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி மண்டபத்தில் மேற்படி நூல் வெளியீடு சம்பந்தமாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் உரையாற்றிய மேற்படி கல்லூரி அதிபர் திரு அன்ரன் இராசநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்படி நூல் வெளியிடுவது சம்பந்தமான இக்கூட்டத்துக்கு வட்டாரக் கல்வியதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் தலைமை தாங்கினர்.

உப அதிபர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கருத்து வெளியிடுகையில், அண்மையில் வெளியிடப்பட்ட காங்கேசன் கல்வி மலரைப்போல, இந்த வரலாற்று நூலும் அமையவேண்டுமென்றும், இந் நற்பணி நிறைவேற அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

வரலாற்று நூலின் பிரதம ஆசிரியராக திரு பி. ஏ. சி. ஆனந்தராஜன் தெரிவு செய்யப்பட்டார் மலர்க்குழு ஒன்று இக்கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்களின் வரலாறுபற்றிய தகவல்களைத் தந்துதவ விரும்புவோர் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி ஆசிரியர் திரு. பி. ஏ. சி. ஆனந்தராஜன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## நிர்வாகிகள்

(கொழும்புத்துறை)

அல்லைப்பிட்டி சனசமூக நிலையங்களின் சமாஜ நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகர் திரு. சீ என். றங்கநாதன், தலைவர் திரு. சோ. சுப்பிரமணியம் செயலாளர் திரு. ந. றுபேர்ட், பொருளாளர் திரு. சோ. நகேஸ்வரன், நிர்வாகக் குழு திரு. செ. புண்ணியமூர்த்தி, செல்வி த. புஷ்பராணி, திரு சி பரமகுரு, திரு. நீ. சவரிமுத்து.

0 0 0

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளைச் சேர்ந்த பரிபாலன அலுவலர்களின் (ஏ. ஓ.) சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோ உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ஏ. சண்முகராசா, செயலாளர்: திரு. ஜே எஸ். அலெக்சாண்டர், நிர்வாக உறுப்பினர்கள்: திரு. ரி இராமலிங்கம், திரு. எம். தம்பிப்பிள்ளை.

[ஜ]

## உப மின் நிலையம்

[சுண்டுக்குளி]

யாழ். அபிவிருத்திச் சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தினுல் ஆனைக்கோட்டை மூத்தநயினர் ஆலயத்திற்கு அருகாமையில் புதிய உடமின்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்ற . இதனல் பல காலமாகச் சீரற்ற மின் பாவனையைப் பெற்றுவந்த நவாலி-ஆனைக்கோட்டை மின் பாவனையாளர்கள் அதிக நன்மையடையவுள்ளனர்.

## சிறுவர் பாடசாலை

[மாவிட்டபுரம்]

சர்வோதய இயக்கத்தின் உதவியுடன் கீரிமலைப்பகுத சிறுர்களின் நலன் கருதி சிறுவர் பாடசாலை ஒன்று ஆரப்பிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை பிரஜைகள் குழு எடுத்த நடவடிக்கையின் பயனுக இப்பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஏழைச் சிறுர்களின் கல்வி விருத்தியடைய இச்சிறுவர் பாடசாலை பெரிதும் உதவுமென பாடசாலையை திறந்து வைத்த கீரிமலை பிரஜைகள் குழுத்தலைவர் திரு, க. சுந்தரமூர்த்தி கூறினர்.

## புத்தக விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கு சென்ற வாரத்தில் 14,566 புத்தகங்கள் விநியோகிக்கப் படுவதற்காக வந்து சேர்ந்துள்ளன இப் பகுதியிலுள்ள 51 பாடசாலைகளுக்கு இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த வாரத்துக்குள் இவை முழுவதும் விநியோகிக்கப்பட்டுவிடும் எனத் தெரிய வருகிறது.

இம்முறை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப் படுவதற்கு வந்துள்ள இலவச புத்தகங்களிலும் 6 ம்ஆண்டு வகுப்புக்கான தமிழ் புத்தகங்கள் இல்லாமை ஆசிரியர்கள் மத்தியில் பெருப் ஏமாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற விருக்கும் ந்தவகுப்பு மாணவர்களுக்கு இ புத்தகங்கள் இல்லாமை இவர்களது டரீட்சையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக குறிப்பிட்ட இத் தமிழ் பாடப் புத்தகங்கள் இங்கு விநியோகிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞான சேவைக்கால பயிற்சி

(மானிப்பாய்)

ஐந்தாம் ஆண்டு வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு வரும் 24ந்திகதி காலை 8-30 மணி முதல் பி ப. 3 மணி வரை சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மானிப்பாய் வட்டாரத்தைச் சேர்ந்த இந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கான ஒழுங்குகளை மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரிதிரு எஸ். தனஞ்செயன் மேற்கொண்டுள்ளார்.

## நெல்லியடியில் பாதுகாப்புச் சபை

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை நெல்லியடி உப அலுவலகத்தின் 7 வட்டாரங்களிலும் சமூக விரோத செயல்களைத் தடுத்து நிறுத்தி மக்களைப் பாதுகாக்கு முகமாகப் பாதுகாப்புச் சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

இப் பாதுகாப்புச் சபைகள் தத்தமது பகுதிகளில் நடைபெறும் கொள்ளைகளைத்தடை செய்தல், அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கையை மேற் கொள்ளுதல், அசம்பாவிதங்களினல் காயமடைவோருக்குச் சிகிச்சையளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பாதுகாப்புச் சபைகளுக்கான ''ஒழுங்கு விதிக்கோவை'' இளைப்பாறிய உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. கே. ஆறுமுகம் தலைமையிலான குழுவினுல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## பஸ் சேவை நடாத்தக் கோரிக்கை

[வவனியா]

வவனியாவிலிருந்து செட்டிக்குளத்திற்குத் தினமும் ஒரு பஸ் சேவையாவது நடாத்தும்படி வவனியா அரச அதிபரை செட்டிக்குளம் பிரஜைள் கேட்டுள்ளனர்.

கடந்த திங்கட் கிழமை வவனியா அரச அதிபர் செட்டிக்குளத்திற்கு சென்றிருந்த போது அவ்வூர் மக்கள் இவ் வேண்டுகோளை விடுத்தனர்.

செட்டிக்குள மக்கள் விவசாய உற்பத்திகளை சந்தைப் படுத்தவும் விவசாயத்திற்கான உரம் கிருமிநாசினி வகைகளை பெற்றுக் கொள்ளவும், கடும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கவும் வவனியாவிற்கே வர வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள அனேகமான கடைகள் மூடப்பட்டுக் கிடப்பதை காணமுடிகிறது. அத்துடன் வீதிள் குன்றும் குழியுமாக காட்சி தருகின்றன.

## இரத்ததானம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் ஏற்படும் இரத்தத் தட்டுப்பாட்டினை நீக்க உதவும் பொருட்டு சாவகச்சேரி லியோ கழகம் மிக விரைவில் இரத்தான நிகழ்ச்சி ஒன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளது .

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ள இரத்ததான நிகழ்ச்சியில், இரத்ததானம் செய்ய விரும்புவோர் சாவகச்சேரி லியோ கழகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டப் படுகின்றனர்.


முல்லைத்தீவில்..... இன்று

**மங்கள திறப்பு விழா**



இன்று 19-05-1986
திங்கட்கிழமை

பகல் 12-17 தொடக்கம் 1-05 வரையான
சுபவேளையில்

முற்றிலும் நவீன முறையில் அமைக்கப்பட்ட
எமது ஸ்தாபனமான

**குமரன் கிறீம் கவ்ஸ்**



எனும் ஸ்தாபனம் திறந்துவைக்கப்படவுள்ளது.

அவ்வேளையில் தனிப்பட்ட அழைப்புகள்
கிடைக்கப்பெருத அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கிறர்கள்.

**குமரன் கிறீம் கவ்ஸ்**

பஸ்நிலையம், முல்லைத்தீவு.

[C 2336]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 19 5-86

# நேற்று பரவலாக நடந்த படைகளின் தாக்குதல்களைபுலிகள்முறியடித்தனர்

[யாழ்ப்பாணம்]

''நேற்று பல இராணுவ முகாம்களிலுமிருந்து இன ஒழிப்பிற்காகப் புறப்பட்ட இராணுவத்தினரை நாம் எதிர்கொண்டு தாக்கியதில் இராணுவத்தினர் பின்வாங்கினர்'' எனத் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பலாலி, ஆனையிறவு, கோட்டை, காங்கேசன்துறை [ஹாபர்வியூ] ஆகியஇராணுவ முகாங்களிலிருந்தும் காரை நகர்கடற்படை முகாமிலிருந்தும் பொம்பர்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் மக்களை அழிக்கும் நோக்குடன் இராணுவத்தினரும், கடற்படையினரும் ஆகாயப்படையினரும் ஒரே சமயத்தில் முகாம்களை விட்டு வெளியே வந்த போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இவர்கள் வெளியே வரமுடியாமல் பின்வாங்கினர்கள்.

நேற்றுக்காலை பலாலி இராணுவ முகாமிலிருந்து வசாவிளானை நோக்கி நூற்று சணக்கான இராணுவத்தினர் வெளியே வந்தபொழுது நாம் நாம் மேற்கெண்ட சிலிண்டர் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலே பலியானர்கள். பலர் காயமடைந்தனர். தொடர்ந்து கட்டுவன் நோக்கி வாகனங்கள் சகிதம் நகர்ந்த இராணுவத்தினரைக் குறிவைத்த ரொக்கட் தாக்குதலால் ஒரு நவீனரக வாகனம் முற்றுகச் சேதமடைந்தது. பலர் பலியாகினர். இந்த நேரடிமோதலில் இறுதி வரை போராடிய எமது வீரன் கேசிகன் [ஊர்காவற்றுறை] வீரமரணமடைந்தான்

இதேபோல நேற்று மண் பகல் ஹாபர்வியூ இராணுவ முகாமிலிருந்து மாவிட்டபுரத்தை அழிக்கவந்த நூற்றுக் கணக்கான இராணுவத்தினரை எதிர்கொண்டு போராடிய எமது வீரர்கள் இராணுவத்தினரை பின்வாங்கச் செய்தனர். இத்தாக்குதலிலும் பல இராணுவத்தினர் பலியானதுடன் சிலர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை காரைநகர் கடற்படை முகாமிலிருந்து சுருவில் பகுதியை அழிக்க நூற்றுக்கணக்கான கடற்படையினர் வந்தனர் இவர்களுக்கு உதவியாக 2 ஹெலிகொப்டர்களில் அதிரடிப்படையினர் வந்திறங்கினர். இவர்களையும் நேருக்குநேர் எதிர்கொண்டு எமது வீரர்கள் போராடி முன்னேறமுடியாது பின் வாங்க வைத்தனர். இந்த நேரடிமோதலில் ரஞ்சித் [மன்ஞர்] வீரமரணமடைந்தார்.

கோட்டை இராணுவமுகாமிலிருந்து மண்டைதீவை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீதான நேரடி மோதலில் பல இராணுவத்தினர் பலியானதுடன் தொடர்ந்து முன்னேற முடியாமல் பின்வாங்கினர்.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து 40 நவீன ரக வாகனங்களுடன் வெளியே வந்த இராணுவத்துடன் எமது வீரர்கள் கடும்சமரில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் 2 நவீன ரக வாகனங்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தினர் பின்வாங்கினர்.

இத்தாக்குதலின் போது எமது வீரர்களான அங்கிள், ரகு ஜோதிரவி ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற இராணுவத்தினரின் அனைத்துத் தாக்குதலையும் நாம் வெற்றிகரமாக முறியடித்தோம்.

இம்மோதல்களின் போது எம் மக்களைக்காக்கத் தம் உயிரை இம்மண்ணுக்குத்தந்த எமது தோழர்களுக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கும் அதேவேளை தினம் தினம் நாம் பலியாகும் போதும் எம்மக்களை நிச்சயம்பாதுகாப்போம்.'' [து]

## இருகல்லூரிகள் இராணுவவசம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தின் இரு பிரபல கல்லூரிகளில் ராணுவம் முகாமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வசாவிளான் மகாவித்தியாலயமும் ஊர்காவற்துறை அர்ச்.அந்தோனியார் கல்லூரியுமே இந்த இரு கல்லூரிகளுமாகும்.

## வறுமை நிவாரணம்: ஒரு சலுகை

[நெடுந்தீவு]

வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூபா 199/- க்குக் குறைவாக வருமானம் உள்ள ஒரு குடும்பத்தில் ஐந்து அங்கத்தவர்களுக்கு மட்டும் உணவு முத்திரை வழங்கப்படும் என்ற விதி இருந்த போதிலும், முன்னர் அக்குடும்பத்தில் ஐந்திற்கு மேற்பட்டவர்கள் உணவு முத்திரைகள் பெற்றிருப்பின், அவர்கள் அத்தொகை அளவினதான உணவு முத்திரைகளை புதிய திட்டத்தின் கீழும் பெறத் தகுதியுள்ளவராகின்றனரென அறிவக்கப்பட்டுள்ளது.

வருமானம் ரூபா 199/- க்குக் குறைவாக இருந்தால் மட்டுமே இவ் விசேட சலுகை என்பது குறிப்பிடத்தக்கது.

## தட்டுப்பாடு

[சுண்டுக்குளி]

யாழ். பிறப்பு, இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் பத்திரங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இவ்வத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் வெள்ளைக் கடதாசிகளில் எழுதியே விண்ணப்பிக்க வேண்டியுள்ளது.

## திடற்புலம் இளைஞர் மன்றம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

''பொது நூல்நிலையம் ஒன்று இல்லாமையால் ஏழாலை கிராம சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் கல்வியறிவில் பின் தங்கி உள்ளனர். எனவே இப் பகுதியில் ஓர் நூல் நிலையத்தை அமைக்க உதவுமாறு கோரி திடற்புலம் இளைஞர் மன்றத்தினர் யாழ் அரச அதிபருக்கு ஓர் மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ''19ʻ9ம் ஆண்டு அமைக்க பட்ட வீதிகள் இது வரைமீளச் செப்பனிடப்படாது போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளதென்றும் அதிகளவு விவசாய மக்களைக் கொண்ட இப் பகுதிக்கு இதுவரையில் மின்சாரவசதி அளிக்கப்படாமலும் போக்குவரத்து வசதி இல்லாததாலும் வைத்தியசாலைகளிற்கு பலமைல் தூரம்செல்லவேண்டியிருக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய ஓர் பொது வைத்திய நிலையம் அமைத்துத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## அனுராதபுரத்தில் விசாரணை தொடர்கிறது

[யாழ்ப்பாணம்]

அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையார் விலாஸ் பஸ்ஸில் காணப்பட்ட பார்சல் தொடர்பான விசாரணை நேற்று நடைபெற்றது.

விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களில் இருவரின்வாக்குமூலங்கள் நேற்றுப் பதிவு செய்யப்பட்டதாகவும் இன்று மற்றவர்களின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்படலாம் என்றும் அறியப்படுகிறது.

இவ்விசாரணை தொடர்பாக அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் 'ஈழநாடு' கொழும்புக்கிளைப் பிரதிநிதிகள் திரு. கந்தசாமி திரு. பெஞ்சமின் இராசரத்தினம் பிள்ளையார் விலாஸ் கொழும்புக்கிளை முகாமையாளர் திரு ஜேகப் பஸ்சாரதிகள் இருவர். பிரயாணி ஒருவர் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் [க]

## பிரெஞ்சு விமானவிபத்தில் 19 ராணுவம்பலி

(பாரிஸ்)

பிரான்ஸின் கடற்படை விமான மொன்று பயிற்சியின் போது கிழக்காபிரிக்க நாடான திபுத்திற்கு வடக்கே நேற்று விழுந்து நொருங்கியதில் 19 இராணுவ வீரர்கள் இறந்துள்ளதாகத் தெரியவருகிறது

திபுத்தின் தலைநகருக்கு வடக்கேயுள்ள ஐயாயிரம் அடி உயரமான மலைக்கு மேலாக இந்த விமானம் பறந்து கொண்டிருந்த சமயம் இந்த விபத்து ஏற்பட்டது. [து]

## தமிழர் கட்டாய லீவு: காங்கிரஸ் ஆட்சேபம்

[கொழும்பு]

''தமிழ் அரசாங்க ஊழியர்களை கட்டாயலீவில் அல்லது இடமாற்றத்தில் அனுப்பும் அரசின் நடவடிக்கைகளைத் தமிழ்க் காங்கிரஸ் வன்மையாக ஆட்சேபிக்கிறது''.

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது தமிழ்க் காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:'' அரசின் இவ்விக நடவடிக்கை ஒவ்வொரு தமிழரையும் ஒரு சந்தேக நபராக இவ்வரசாங்கம் கருதுகின்றதெனபதைக் காட்டுகின்றது. தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இந்த நடவடிக்கை நிலைமையை மேலும் மோசமாக்க விருக்கின்றது.

''இனப்பிரச்சினை சம்பந்தமாக இடம்பெறும் சம்பவங்கள் பற்றி உத்தியோகபூர்வமான செய்திகள் கொடுப்பவர்கள் நிலைமையை மோசமாக்குகின்றார்கள். ஏனெனில் சில பொது சனத் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்படும் சில செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்பதனை நாம் அறிவோம்.

தமிழரின் உள்ளக் குமுறல் நாங்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகள் என்பதே மேற்படி நடவடிக்கை அவர்களைச் சந்தேகநபர்கள் என்ற இடத்திற்குத்தள்ளியுள்ளது''. (க)

## பலாலி விமானநிலையம் பொதுப்பாவனைக்கு தடை

[கொழும்பு]

பலாலி விமான நிலையம் பொதுமக்கள் பாவனைக்காக இனிமேல் உபயோகிக்கப்பட முடியாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது,

இதுவரை காலமும் உபாலி விமான சேவை நிறுவனம் கொழும்பிலிருந்து பலாலிக்கு தனிப்பட்ட விமானசேவைகளை நடத்தி வந்தது தெரிந்ததே.

## கொழும்பில் நேற்று கடும் சோதனை

[கொழும்பு]

கொழும்பு நகரெங்கும் நேற்று முழுநாளும் பரந்த அளவில் கடும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் கொழும்பில் தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளான வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டைப உட்பட பலபகுதிகளில் இராணுவம் சோதனைகளை நடத்தியது தெரிந்ததே. நேற்றும் இப்பகுதிகளில் கடும் தேடுதல் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது இத்தேடுதல்களில் சிலர் கைதாகியுள்ளனர்.

முக்கிய அம்சமாக கொழும்பின பல இடங்களில் கார்களும் சோதிக்கப்படுகின்றனவாம். அத்துடன் வீதியால் நடந்துசெல்பவர்களும் இடையிடையே சோதிக்கப்படுகின்றனராம்.

கொழும்பு நகரில் அண்மையில் நடந்த இரு குண்டு வெடிப்புச சம்பவங்களைத தொடர்ந்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பக தெரிந்தகே. அத்துடன்தமிழ்த் தீவிரவாதிகள் இனிமேல் கார்க் குண்டுகளைப் பாவிக்கலாம்என [illegible] னர். [illegible]

## வயோதிபர் பலி

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஊர்காவற்றுறையை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கணபதி கோகிலான் [வயது 60] என்ற வயோதிபர் மரணமானுர். இருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [illegible]

## யாழ். நகரில் நேற்று ஒரு இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டையிலிருந்து இராணுவத்தினர்ஷெல், துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து போராளிகள் பதில் தாக்குதலை நடத்தினர் கோட்டை இராணுவமுகாமைச் சுற்றியுள்ள வீதிகளில் போராளிகள் மண்மூடைகளிலைஅரண் அமைத்து எதிர்த் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானுர். இருவர் காயமடைந்தனர்.

இராணுவத்கினரின் ஷெல் தாக்குதலில் கொட்டடியைச் சேர்ந்த வீரசிங்கம் வசந்தகுமார் என்ற இளைஞர் மரணமானுர். நாவாந்துறையைச் சேர்ந்த சின்னத்துரை என்பவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ]

### கடத்தல் தோல்வி

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்கமதகுரு ஒருவர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை துப்பாக்கி முனையில் அபகரிக்க முயன்ற கோஷ்டியினர், அவ்வீதியால் வாகனம் ஒன்று வரக்கண்டதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தலைமறைவாகி விட்டனராம்.

அந்த மதகுருவுக்கு எந்த வித காயமும்மேற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு [illegible] வெளியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (மா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org